செ.வெ.எண்.68 நாள் : 29.03.2020

# அரியலூர் மாவட்டம்

## அனைத்து ஊராட்சிகளிலும் மருத்துவக்குழுவினரால் கணக்கெடுக்கும் பணி இன்று முதல் துவக்கம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவக்குழுக்கள் மூலம் வீடு, வீடாக சென்று ஆய்வு செய்யும் பணி இன்று (29.03.2020) முதல் துவக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து வீடுகளுக்கும் மருத்துவர் தலைமையில் ஒரு கிராம சுகாதார செவிலியர், அங்கன்வாடி பணியாளர்கள் கொண்ட குழுவினர் நேரடியாக சென்று வீட்டிலுள்ள நபர்களுக்கு இருமல், காய்ச்சல், மூச்சுதினறல் இருக்கிறதா என்றும், வெளியூர், வெளிநாடு, வெளி மாநிலங்கள் பயணங்கள் மேற்கொண்டுள்ளனரா என பயண விவரங்களை கேட்டறிந்து, பதிவு செய்ய உள்ளனர். இதற்காக 36 மருத்துவர்கள் தலைமையில், 129 கிராம சுகாதார செவிலியர்கள், 203 அங்கன்வாடி பணியாளர்கள் என 368 நபர்களைக் கொண்ட 36 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று இக்குழுவினர் அரியலூர் நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட 18 வார்டுகளிலும், அரியலூர் ஒன்றியத்திற்குட்பட்ட தவுத்தாய்குளம், அம்மாகுளம், சுப்புராயபுரம், ரெங்கசமுத்திரம், வாலாஜாநகரம், மின்நகர், இராஜீவ்நகர், தாமரைக்குளம், எருத்துக்காரன்பட்டி, உசேனாபாத், கயர்லாபாத், கல்லங்குறிச்சி, வெங்கடகிருஷ்ணாபுரம், இராவுத்தன்பட்டி மற்றும் பள்ளகிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மொத்தம் 16704 வீடுகளுக்கு சென்று வீட்டில் உள்ளவர்களிடம் மேற்கண்ட விவரங்கள் குறித்து கணக்கெடுக்க உள்ளனர். கணக்கெடுக்கும் பணியின்போது, வீட்டில் உள்ளவர்களில் யாருக்காவது காய்ச்சல், இருமல், மூச்சுதினறல் இருந்தால் அவர்களை அருகிலுள்ள 108 வாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். மேலும், வீட்டில் உள்ள நவர்களின் யாராவது வெளியூர், வெளிநாடு, வெளி மாநிலங்கள் பயணங்கள் மேற்கொண்டு, வந்தவர்களாக இருந்தால் அந்த நபர்களின் வீட்டில் தனிமைப்படுத்தபட்டு, ஒட்டு வில்லைகள் ஒட்டப்பட்டு, 14 நாட்கள் மருத்துவக்குழுவினரால் கண்காணிக்கப்படுவார்கள்.

மேலும், தொடர்ந்து அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வார்டுகள், நகராட்சி, பேரூராட்சி மற்றும் அனைத்து ஊராட்சி பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் இக்குழுவினர் நேரில் சென்று கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடவுள்ளார்கள். இவர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**